•Written by - வெங்கடேஷ் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

கால வளி என்ற தலைப்பில் விட்டல்ராவிடமிரூந்தூ ஓரூ நாவல். நாவல் அல்ல, ஓரூ சொல்லாடல். பூனவைூ அல்ல. ஓரூ உண்மை நிகழ்வின் மீ தூ சற்றூ பூனவைூம் ப□சிய பதிவூ. விட்டல் ராவ் நமக்கூத் தரிந்த ஓரூ நாவலாசிரியர், சிறூ கதை எழூத்தாளர். அவர் தாய் மொழி கன்னடமயோனாலூம், அவரதூ எழூத்தூ வாழ்க்கை தமிழில் தான் , அவர் எழூத்தூக்கள் அவர் வாழ்ந்த வாழ்க்கையின் சூயசரிதமாக விரியூம். கூணத்தவை. நிறைந்த ஆழ்ந்த படிப்பாளி. மிகவூம் பரந்த படிப்பாளியூம் க□ட.. அவரதூ ஈடூபாடூகள் நாடகம், சினிமா, சரித்திரம், ஓவியம் என பல தளங்களில் விரிந்தவை. கன்னட நாடக ஆரம்ப சரித்திரம் என்றே சொல்லத் தக்க விரிவில், ஓரூ நாவல் எனவூம் தந்தூள்ளார். இதற்கான அவரதூ த□ண்டூதல் அவரதூ சகோதரி கன்னட நாடகங்களில் பக்கூ பறெ்றதூ தான். அதூ ஆரம்ப கட்டங்களில். அந்த ஈடூபாடூ அவரதை் தமிழ் சினிமாவிலூம் பரந்த ஆழ்ந்த தொடர்பூ கொள்ளச் சயெ்தூள்ளதூ. அதூ பரவலாக, தனெ்னிந்திய, இந்திய, உலக சினிமா என்றூம் விரிவதசை் சாத்தியமாக்கியிரூக்கின்றதூ. தமிழ் சினிமா பற்றியூம் கன்னட சினிமா பற்றியூம், கனமான பூத்தகங்கள் எழூதியூள்ளார். நமதூ பயெரூம் பூகழூம் பறெ்ற சினிமா தலகைளை விட உயர்ந்த தளத்தில் எழூதப்பட்டவை அவை. இவயைலெ்லாம் தகவல் சகேரிப்பூ என்ற பூள்ளியில் நிற்பதல்ல. ஆழ்ந்த அழகியல் உணர்வூ என்றூம், ஓரளவூ, ஓரூ சீ ரிய பார்வையாளன் கிரஹிக்கூம் அளவூ தொழில் நூட்ப அறிவூம் க□டியதூ என்றூம் விரிந்தூ நீ ண்டூள்ளதூ. அவரதூ பூகபை்பட பயிற்சியூம் இதற்கூ அடித்தளத்தில் இரூந்தூ உதவியிரூக்கக் க□டூம். அவரதூ கலை உணர்வூ எல்லாவற்றூக்கூ அடி நாதமாக

•Written by - வெங்கட் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

இரு ந் திருக் கிறது என் றும் சொல் ல வேண் டும் . தான் சென் ற இடங் கள் , படித் தறிந் த வரலாறு இவற் றிலிருந் து அவர் தனதாக் கிக் கொண் டுள் ள சிற் ப ஓவிய, கட் டிட வரலாறு எல் லாம் , இவை அத் தனையும் அவரை, இன் றயை தமிழ் எழுத் துலகில் தனிப் பட் ட ஓரு வியக் தியாக, கலை உலகின் எல் லா பரிமாணங் களிலும் தன் அனுபவத் தபை் பதிபவராக நமக் கு த் தந் துள் ளது.

நம் தற் கால தமிழ் எழுத் தின் சந் தர் ப் பத் தில் இதசை் சொல் லியே ஆகவேண் டும் . கற் பனை, கலை என் ற பதங் களுக் கலெ் லாம் நாம் தந் து பூரிந் து கொள் ளும் அர் த் தங் கள் விபரீ தமானவை. கால வளெியின் மூன் னூரயைில் விட் டல் ராவே இம் மாதிரியான விபரீ த அர் த் தம் கொண் டு விளநை் த ஓரு எழுத் து, வகெு ஜன ஆதரவு மட் டுமல் ல, நமக் கே உரிய அறிவார் த் த உலகின் ஓப் புதலையும் பாராட் டயைும் பறெ் ற, அகில இந் திய களெரவமும் விருதும் பறெ் ற ஓரு தரமற் ற படபை் பு, ஓரு ஓவியனபை் பற் றிய காதல் கதை. அந் த காதல் நாயகனை ஓவியனாக் கிப் பார் க் க அந் த எழுத் தாளருக் கு ஆசை இருந் தகாரணத் தால் தான் அவன் ஓவியன் . இல் லாவிட் டால் அவன் ஓரு பலசரக் கு க் கடகை் காரனாக இருந் தால் , நம் பகமான சித் திரம் வந் திருக் கு மோ என் னவோ. என் நினவைில் அவன் இரவு பகலாக, சிற் பம் ஒன் றை சுத் தியல் கொண் டு உருவாக் கிக் கொண் டிருக் கிறான் . இவ் வளவுக் கும் அந் த படபை் பாளி பல ஓவியர் கள் , சிற் பிகளோடு பசேிப் பறெ் ற ஞானத் தோடு தான் இந் த கதாநாயகனபை் படதை் த தாக சொல் லிக் கொண் டதயும் படித் த நினவைு எனக் கு இருக் கிறது.

விட் டல் ராவ் ஓரு கால கட் டம் வரை சனெ் னயைில் உள் ள ஓவியக் கல் லூரியில் பயின் றவர் . அக் கால கட் டத் திய ஆசிரியர் களோடும் , மாணவர் களோடும் பழகியவர் . ஆனால் அவர் ஓவியராகவோ சிற் பியாகவோ தன் வாழ் க் கயை அமதை் துக் கொண் டவரில் லை. கலகை் கல் லூரி ஆசிரியராகக் கூட த் தொடங் கியவரில் லை.

அக் கால கட் ட அனுபவங் களின் , நண் பர் களோடான உறவாடல் களின் , சூழலின் பதிவுதான் காலவளெி. இது ஏதும் கதை சொல் லும் எழுத் தல் ல. கதை என் று சொல் ல ஏதும் இதில் இல் லை. ஓரு சிறிய கால நீ ட் சியில் ஓவியம் சார் ந் த உலகில் மாணவராக பங் கறே் றதன் விளவைாக பறெ் ற நண் பர் கள் கூட் டம் , அதிலும் நரெுங் கிய ஓரு சிலரே, அக் காலத் திய அவர் கள் அக் கறகை் , பார் வகை் , சயெல் பாடுகள் , அக் கால கட் டத் திய இலக் கிய பத் திரிகை உலகச் சித் திரம் அவர் களது ஆசகை் , கனவுகள் , எல் லாமாக ஓரு கோட் டுச் சித் திரம் நமக் கு க் கிடகை் கிறது கால வளெியில் . ஓரு சயெ் திச் சுருளில் அவ் வப் போது தோன் றி மறயையும் தூண் டுக் காட் சிகளின் தொகுப் பு என் றும் சொல் லாம் . எவரபை் பற் றியுமான மூழுச் சித் திரமோ வரலாறோ இல் லை. சில நண் பர் களின் சித் திரம் மற் றவர் களை விட சற் று அதிகம் பதிவாகியிருப் பது, பழகிய நரெுக் கத் தின் , காரணமாக இருக் கும் . அக் கால கட் டம் , ஓவியக் க் ல் லூரி நிகழ் வுகள் கற் பனயைல் ல. சிலர் அவ் வப் போது வந் து போகிறவர் களும் கற் பனை அல் ல. நாம் அறிந் த நிஜ மனிதர் கள் . இப் பூத் தகத் திற் கு அணிந் துரை ஒன் று வழங் கியிருக் கும் ஆதிமூலம் அக் காலகட் டத் தில் ஓவியக் கல் லூரி மாணவர் , பின் அது சார் ந் த ஓரு அமபை் பில் வலேையில் இருந் தவர் . இன் னும் எத் தனையோ மற் ற மாணவர் கள் போல.

•Written by - வெங்கட் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

ஓவியக் கல்லூரி ஆசிரியராகவும் பின் சோழமண்டலத்தில் உரூவாக்கத்தில் மூலவராகவும் இருந்த ஓவியர் கே சி எஸ் பணிக்கர். அறுபது எழுபதுகளில் சென்னையில் வாழ்ந்த கோவிந்தன் இன்னொருவர். அவர் அன்றைய இளம் மலையாள கலைஞர்களுக்கு கூருவாக இருந்தவர். ஆனால் கூருபீடமற்ற கூரு. அவர் ஓவியர், சிற்பிகள், எழுத்தாளர்களிடையே ஓரு இணைப்பு பாலமாகவும் இருந்தவர். மலையாள இளம் தலைமுறையினர் மட்டுமல்ல, தமிழ் எழுத்துலகிலும் சிறுபத்திரிகைகளின் வட்டத்துக்குள் இருந்த 1960-70 தமிழ் எழுத்தாளர்களுக்கும் அவர் கூரு ஸ்தானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். அக்கால கட்டத்தில் தில்லியிலிருந்த என்னையும் அவர் சலெவாக்கு கொண்டிருந்த வட்டத்தில் அவர் கவர்ந்து இழுத்துக்கொண்டார் என்றால் அவரது ஆளுமையின் அதிகார பூச்சு எதுவுமற்ற சலெவாக்கு எத்தகையது என்று யூகித்துக் கொள்ளலாம். அவரைச் சுற்றியிருந்த இளம் எழுத்தாளர் ஓவியர்களுக்கான ஓரு மடேயாக Sameeksha என்று ஓரு காலாண்டு இதழை, அவ்வப்போது மலையாளத்திலோ, ஆங்கிலத்திலோ தன் ஆசிரியத்வத்தில் கொண்டு வந்தவர். அதன் முன்றோ நான்கோ இதழ்களில் நானும் எழுதியிருக்கிறேன். அவர் தான் முதலில் என்னை மௌனியைப் பற்றியும் (Mowni and his world of articulated silcnce) அவர் கதை ஒன்றின் மொழிபெயர்ப்பையும் (பிரக்ஞைவெளியில் – In the Expanse of Consciousness) எழுதச் சொல்லி, 1971 – ல் வெளிவந்த Sameeksha, Special Number on ”Accent on the Young” இதழில் வெளியிட்டார். சமீக்ஷா இதழ் ஓவ்வொன்றும் இளம் தமிழ், மலையாள, இன்னும் மற்ற இந்திய மொழி எழுத்தாளர், ஓவியர்கள், சிற்பிகளின் படைப்புகள் எழுத்து/ புகைப்பட பதிவுகள் நிறைந்ததாக இருக்கும். அவர் அடிக்கடி சொல்லும் ஓரு தாரக மந்திரம் என்று க.நா.சு என்னிடம் சொன்னது,

“இரண்டு வருஷங்களுக்கு மலே் ஓரு பத்திரிகையை நடத்தக் கூடாது. அதற்கு மலே் இருக்கும் ஓரு பத்திரிகை அதன் அர்த்தமும் பூதுமையும் இழந்து நிற்கும் ஒன்று தான்.”

இதே வார்த்தைகளில் அல்ல. அவர் சொல்ல விரும்பூவது அதற்கு மலே் வறோ ஓரு பத்திரிகை பூதிய ;பாதையைத் தரே்ந்து கொள்ள வணே்டும்” என்பது.. சொன்ன படியே அவர் நடத்திய எந்த பத்திரிகையும் இரண்டு வருடங்களுக்கு மலே் இருந்ததில்லை. இந்த தாரக மந்திரம் க.நா.சு.வுக்கு பிடித்தமாகப் போனதில் ஆச்சரியமதேும் இல்லை. இரண்டு பரேும் இந்த ஓரே கொள்கையைப் பின் பற்றியவர்கள்.

அவரும் காலவெளியில் வந்து போகும் ஓரு பரெிய ஆளுமை. அவ்வப்போது தன் அபிப்ராயத்தை சுருக்கமாக சில சமயம் கிண்டலாகவும் சொல்லிப் போகிறவர். இன்னொரு விருந்தினர் இந்த ஓவியர் கூட்டத்துக்கு அவ்வப்போது அறிவிப்பின்றி சிறப்பு வருகை தருபவராக வந்து சல்லாபித்து இத் தனித்த மாணவர் கூட்டத்தினரை வியப்பில் ஆழ்த்தி கவர்ச்சியும் ஆதரவும் தந்து சலெ்பவர் நிரஞ்சன் என்ற பயெரில் வரும் சந்திரலகோ பூகழ் நடிகர் ரஞ்சன். அவர் இங்கு சகல கலா வல்லவராக, ஓவிய முயற்சிகளில் அக்கறை கொண்டவராக ஆதரவாளராக வந்து பம்பாய்க்கு கூடி பயெர்ந்து மறைந்தவராக காட்சி தருகிறார். வியந்து சூழும் மாணவர்களுக்கு தன் வாள் வித்தை

•Written by - வெங்கட் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

தரேச் சியையும் காட்டிச் சலெக்கிறார். இதையெல்லாம் மீறி நான் என் மாணவப் பருவத்தில் நடிகர் என்பதையும் மீறி அவரை பற்றி அறிந்ததும் அவரது நடனக் கலை ஈடுபாடு பற்றித் தான். நாட்டியம் என்றோ, நடனம் என்றோ பெயரில் ஓரு பத்திரிகையும் சில காலம் நடத்தியதையும் பற்றிப் படித்த ஞாபகம். 1947-48 களில் கும்ப கோணத்தில் காந்தி பார்க் எதிரில் இருந்த பத்திரிகைக் கடைகளில் ரஞ்சனது பத்திரிகை நாட்டியமோ நடனமோ தொங்கியிருக்கப் பார்த்திருக்கிறேன்.

இன்னுமொரு நிஜ மனிதர் பூனை பெயரில் என்ற சாத்தியக் கூறு, கொண்ட இந்த நாவலில் மையமாக இருக்கும் நாலு வரோடு ஐந்தாவதாக நெருங்கிப் பழகும் பிரசன்னன் என்னும் சிறுபத்திரிகை எழுத்தாளன், ஓவிய பரிச்சயமும் ஞானமும் கொண்டவன். இது விட்டல் ராவயேோ அல்லது கதை சொல்பவனுக்கு நெருக்கமானவன் என்றோ வதைத்துக் கொள்ளலாம்.

அந்த நாலு வரதை் தான் மையமாகக் கொண்டுள்ளது காலவெளி. அந்த நாலு வரும், உன்னி கிருஷ்ணன், சக்கரவர்த்தி, மூருகசேன் பின் தர்மன். இந்த நாலு வர் தான் அனகேமாக பூத்தகம் மூழுதும் நிரவியிருப்பவர்கள். இந்நாலு வர் தான் தம் ஸ்டூடியோக்களில், அல்லது நண்பர்களுடன், அல்லது ஓருவர் பற்றி மற்றவர்களுடன் தம் அபிப்ராயங்களை பரிமாறிக் கொண்டோ பூத்தகம் மூழுதும் பிரசன்னமாயிருப்பார்கள். இவர்களில், படிப்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்படி, மூருகசேனும், தர்மனும் தான் மூன்னூரையில் ஆதிமூலம் சொல்லும் Art Club ரக அமெச்சூர் ஓவிய கூழுவினர். எப்போதும் தம் ஓவியங்கள் உடனே விற்றுப் போவது பற்றி, எது விற்கும் என்றும், அதே சிந்தனையாக இருப்பவர்கள். வாரத்தின் எல்லா நாட்களும் ஓவியம் தீறுறும் Sunday Painters. இதில் தீவிர சிந்தனையாளர்களாக, ஓவியர்களாக மிகுந்தவர் சக்கரவர்த்தியும் உன்னி கிருஷ்ணனும் தான் ஆசிரியர் சித்தரிப்பில் தெரிபவர்கள். ஆனால் இவர்களின் ஓரிஜினல்களை அறிந்தவராகத் தெரியும் ஆதிமூலம் இவரகளையும் சீரிய ஓவியர்களாக ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும் இம்மாதிரியான சன்ன வித்தியாசங்கள் ஏதும் விட்டல் ராவின் சொல்லாடலபை் பொருத்த வரை மூக்கியமில்லை. இந்நாலு வரும் அவரவர் ஈடுபட்டில் இருக்கும் போதும், ஓருவரை ஓருவர் அபிப்ராயங்களை பரிமாறிக் கொள்ளும் போதும், ஓரு ஓவியர்களின் ஸ்டூடியோ சூழலை எழுப்பும்பதிலும் அது வாசகர்களுக்கு ஓரு சூழலாகச் சித்தரித்துக் காட்டுவதிலும் வறெ்றி பறெுகிறார் என்றே சொல்ல வணேடும். இதில் சக்கரவர்த்தியும் உன்னி கிருஷ்ணனும் ஓருவர் ஓவியத்தபை் பற்றி மற்றவர் கருத்துப் பரிமாறலும், சில சமயங்களில் அடக்கிக் கொள்ளும் சந்தகேங்களும், உன்னி கிருஷ்ணனுக்கு மலையாளி என்ற அடையாளம் காட்டும் பாராட்டுக்களும் சொல்லாடலில் மறகை்கப் படுவதில்லை. அத்தோடு உடன் இருக்கும் ஆதரவாளர்கள் கருத்து பரிமாறலின் அறியாத்தனமும் மறகை்கப் படுவதில்லை. இவர்களோடான சூழல் சித்தரிப்பில் அடிக்கடி இடை பூகும் விமரிசகரகள், வராக மூர்த்தியின் (எத்தகயை விமரிசனமும் இல்லாத விவரிப்பு, தகவல் படட்டியல், ரூடால்ஃபின் பாரபட்சமான ஓதுக்கல், அல்லது இல்லாததையெல்லாம் கற்பித்து திட்டமிட்ட பாராட்டுக்கள், அதுவும் மற்றோருக்குத் தெரியாதபடி பாராட்டும் சாமர்த்தியம், “இதில் அரசமரம் நமக்குத் தெரிந்த அரச மரம் தான், ஆனால் இங்கு தீ ட்டியிருக்கும் பிள்ளையாரை அந்த அரசமரத்தடியில் பார்க்கவில்லையே?” என்று அப்பாவியாக காமணெ்ட் அடிக்கும் அம்பா பாய் கோபிநாத்

•Written by - வெங்கட் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

அவரகளுக்கு ஆதரவாக இருக்கும் மாது, அவரது அறியாமையைக் கண்டு ஓரு உள்ளடங்கிய ஏளனம், அந்த அரசமரத்தையே அதன் வளைந்து தழுவி மூறுகிக் மூறுகிக் கிடக்கும் கிளைகளையே ஆண் பெண் பாலியல் இணைவின் தோற்றமாகக் கூறிப்பூணர்த்தும் ஓவியமாகத் தீட்டி, இது ஆணும் பெண்ணும் நிர்வாணமாக இணைந்திருக்கும் காட்சி அல்ல, மூறுகிக் கிடக்கும் அரச மரக் கிளைகள் என்று சொல்லாமல் சொல்லும் சாமர்த்தியம், வர்ணத் தரேவிலும் (சிகப்பு, மஞ்சள், ஆரஞ்ச் .....) கத்தியால் அடை அடையாகப் பட்டையாகத் தீட்டும் வகையிலும் அவன் சீற்றமும், இளம் வயது ஆவசேமும், தர்மனின் பூகபை படமடெுக்கும் நிபுணத்தவமும், தன் ஓவியங்களை வறெும் பட்டங்களாக, தீட்டுபவன். இவன் தன் நண்பர்களோடு சரேந்து பங்கு கொள்ளும் நால்வர் ஓவியக் கண்காட்சிக்கு வரும் (ஆங்கில பத்திரிகையாளர் அல்லது ஓவியங்களை வாங்கும் தோற்றம் தருபவரகளை) கண்காட்சிக்கு வந்த உடனயேே அவரக்ளை வரவறேக்கும் பாவனயைில் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு பசேிக்கொண்டே தன் ஓவியங்கள் இருக்கும்ிடத்துக்கு இழுத்துச் சலெ்வான். எது விற்கும், எது மார்க்கடெ்டுக்கு ஏற்கும் என்று ய□கித்துச் சயெல்படுபவர்கள் தாம் மூருகசேனும், தர்மனும். அனகேமாக இவர்களது ஐந்தில் இரண்டு விற்றுவிடும் எல்லாமே அல்ல என்றாலும். இதுவே ஓரு வறெ்றியாகத் தான் சனெ்னயைில் கருதப்படும். இல்லயைனெில் விற்காத ஓவியங்களை தன்னிடம் கொடுத்து வதை்திருந்தால் தன் (கடயைில்/showroom-ல்) சரே்த்தால் விற்றுக் கொடுப்பதாகச் சொல்லும் சோனி இருக்கவே இருக்கான். ஆனால் அவன் விற்றுக் கொடுத்ததாக உன்னி கிருஷ்ணனுக்கோ சக்கரவர்த்திக்கோ நினைவு இருக்கவில்லை. ஓரு சமயம் உன்னி கிருஷ்ணனின், சக்கரவர்த்தியின் ஓவியங்களை கடயைில் அல்ல, கடகை் காரரின் வீட்டில் பார்த்ததாக தர்மன் ஓரு மூறை சொல்லியிருக்கிறான். ஆனால் ஓவியங்களை விற்பதில், அதற்கறே்ப திட்டமிட்டு வரவைதில் இருவரும் சமர்த்தர்கள்.

இந்த நால்வர் கூழுவுக்கு ஓரு ஸ்டுயிேோவும் உண்டு. பல்லாவரம் பக்கத்தில் வாடகைக்கு எடுத்த இடத்தில். உன்னி கிருஷ்ணனுக்கு தன் வீட்டிலயேே தான் ஸ்டுயிேோ. இவர்களுக்கு உதவியாக இருக்கும் ஓரு ஆங்கிலோ இந்திய கூடும்பமும் உண்டு. பூரசை வாக்கத்தில். நம் ஓவியர்கள் அடிக்கடி அவர்கள் வீட்டுக்கும் சலெ்வதுண்டு. அந்த இடத்தின் வர்ணனை, ஐம்பது அறுபதுகளில் சனெ்னயைில் இருந்த ஆங்கிலோ இந்திய சம□கத்தின் வாழ்க்கயைின் ஓரு சித்திரத்தை தான் பதிவு சயெ்திருக்கிறாரோ விட்டல் ராவ் என்று தோன்றுகிறது. அங்கு இன்றியமயைாது இருக்கும் ஓரு ஆயா. ஓரு ஆயாவை வதை்துக்கொள்வதே இந்த சம□கத்துக்கு ஓரு களெரவம் என்ற் நினபை்பு. அந்த ஆயாவுக்கும் ஓரு மிதப்பு “துரைங்க வீட்டு.. என்று அடிக்கடி சொல்லி பரெுமிதப்படுக்கொள்ளும் மிதப்பு. அத்தோடு இவர்கள் பசே்சில் வரும் ஆங்கில கலப்பு. இவர்களில் சக்கரவர்த்தியுடன் நரெுங்கி பழகி பின்னர் மார்க்விஸ் என்பவனுடன் வளிெிநாடு சனெ்று, அங்கிருந்து கொஞ்சகாலத்தில் மார்க்விஸுக்கு இவள் கசந்து போக, இப்போது ஓரு பெண் கூழந்தையோடு இருக்கிறாள். நிர்வாணமாகப் போஸ் கொடுக்க தயாராக விருக்கும் பெண்ணும் உண்டு. அதிலும் ஓரு பெண் இவர்களிடம் போஸ் கொடுக்க வரத் தயாராக இருப்பதாகச் சொல்வாள். ஏதோ, எனக்கும் தயைல் வலேை தரியும், உங்களுக்கு நானே சயெ்து தருவனே்” என்று சொல்கிற மாதிரித்தான் இருக்கும் அவள் போஸ் கொடுக்க வாய்ப்பு கடே்பது. இது சனெ்னகை்கு பூதிய சமாசாரம். சாதாரணமாக கொஞ்ச வரும்படிக்கு வரும் ஏழை வலேையாட்கள், ரிக்ஷாக் காரர்கள் இப்படித்தான் அகப்படுவார்கள். அதில் உன்னி கிருஷ்ணனுக்கு வருத்தம். இந்த கிழடுகளை நரதை்த தாடியும் மீசையும்மா

•Written by - வெங்கட் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

வரைந்தே பழக்கப்பட்டுவிட்டதால் இளம் வயசுக்காரர்கள் வந்தாலும் தாடியும் மீசையும் தானாகவே வந்துவிடுகிறது என்று சொல்கிறான்.

உன்னி கிருஷ்ணனின் ஓவியங்களுக்கு பத்திரிகையிலும் நல்ல பாராட்டுகள் வந்து விடுகின்றன. அதை ஆங்கிலத்தில் மறேகாளாகக் கொடுக்கப்பட்டிருக்கும் விதத்தில் உன்னிக்கிருஷ்ணனும் அந்த பாராட்டு மறேகாளுக்களும் பூனவைு இல்லை நிஜத்திலயேே ஆங்கில பத்திரிகையில் எழுதப்பட்ட விமர்சனம் தான் உன்னி கிருஷ்ணனும் ஓரு நிஜ ஓவியனின் பூனபையெர் தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதோ ரூடால்ஃப் உன்னி கிருஷ்ணனபை் பற்றி எழுதிய விமர்சன வரிகளில் சில:. Angry outburst which one assumes attack the human situation with sensuous nudes in blazing red, orange and yellow portray the human passion. இப்படி உன்னி கிருஷ்ணன் பற்றியும் சக்கரவர்த்தி பற்றியும் பல இடங்களில், பல வறேுபட்ட கண்காட்சிகள் பற்றி.

நால்வரும் கூட்டாக கண்காட்சி வபை்பது அவரவர் தனித்தன்மயை காட்ட வாய்ப்பில்லாமல் பரோகிறது. கூட்டாகவும் தனி நபர் காட்சியாகவும் சயெ்து பார்க்கலாமே என்ற் பசேச்சும் எழுகிறது. பின் ஓவ்வொருவரும் ஏதாகிலும் டிசனை் சணெ்டரில், கடேபவர்களின் தவேகைக்கு ஏற்ற மாதிரி பாடிக் (batik) கலம் காரி சயெ்து கொடுப்பது என்றும் தீர்மானிக்கிறார்கள். அதுவும் அவ்வப்பரோது அவர்கள் சயெ்து வந்தது தான். ஆனால் இப்பரோது ஓரு மூனபை்பரோது சயெ்யலாம் என்று. இதில் எல்லாம் கவலபை் படாமல் இருப்பது உன்னிகிருஷ்ணனும் சக்கரவர்த்தியும் தான். நால்வர் என்ற கூட்டு அழிந்து பரோய்விடுமரோ என்ற எண்ணமும் தலகைாட்டுகிறது.

இதற்கிடயைில் சக்கரவர்த்தியின் வீட்டுக்கு கனடாவில் இருக்கும் மாமா ஓருத்தர் வருகிறார். அவரும் ஓவிய சிற்ப வணிகத்தில் இருப்பவர் தான். அவருக்கு சக்கரவர்த்தியுடன் தொடர்ந்து தனித்து பசேிய பிறகும் அவனது ஓவியங்களபை் பார்த்த பிறகும் “நீ என்னுடன் கனடா வந்துவிடு, உனக்கு அங்கு நல்ல வரவறே்பு இருக்கும். நானும் உனக்கு விற்பனயைில் உதவி சயெ்கிறனே். இங்கு இருந்து எவ்வளவு நாட்களுக்கு இப்படியே இருப்பாய், கனடியர்களுக்கு வித்தியாசமான மரபு சார்ந்த இந்திய ஓவியங்கள், சிறபங்கள் என்றால் ரொம்ப பிடிக்கும்மாக்கும்” என்றலெ்லாம் சொல்ல, சக்கரவர்த்தியும் கனடா பரோகிறான். சந்தரோஷமாகத் தான் இருக்கிறது. அங்கு ஓரு பரோர்ச்சுகீஸ் பணெ்ணுடன் ஈர்ப்பு ஏற்பட்டு கல்யாணம் சயெ்து கொள்கிறான். இருவரும் பசேிக்கொள்வது ஃப்ரஞெ்சில். கழுந்தை ஒன்று. இப்பரோது. பின் ஓரிரண்டு வருஷங்களுக்கு மலே் அந்த ஈர்ப்பு நீடிப்பதில்லை. விவாக ரத்து சயெ்துகொள்வது, கழுந்தை மாத்திரம் சக்கரவர்த்தியிடம் இருக்கும் என்றும் முடிவாகிறது. சக்கரவர்த்திக்கு இது தவிர, ஓரு ஓவியனாகவும் எப்பரோதும் அவனயைும் உன்னி கிருஷ்ணனயைும் வருத்திக்கொண்டிருந்த பிரசினை இப்பரோது அன்னிய மண்ணில் தீவிரமாக சூடு பிடித்துக் கொள்கிறது. தன் மண்ணின் தன் கலாசாரத்தின் தன் பிறப்பின் அடயைாளங்களை, இவை எல்லாவற்றுக்கும் மலோக தன் வரேயைே இழந்து கொண்டிருப்பதான எண்ணம் பிடுங்கத் தொடங்குகிறது. அந்த இழப்பு தனக்கும் தன் ஓவிய வாழ்க்கைக்குமே பரெிய இழப்பு என்று உணரத் தொடங்கியதும் தமிழ் நாடு

•Written by - வெங்கட் சாமிநாதன் -•
••Thursday•, 23 •July• 2015 19:31• - •Last Updated•
••Thursday•, 23 •July• 2015 21:12•

திரும்பகிறான் தன் பழயை நண்பர்களதை் தேடி.

எப்போதோ ஐம்பதுகளில் மூளை கொண்டு, அறுபதுகளில் வளர்ந்து, கடசியில் எழுபதுகளின் கடை வருடங்களில் தயேந்து மறைந்து விட்ட ஒன்று எழுத்தாளர்கள், ஓவியர்கள், சிந்தனையாளர்கள், விமரிசகர்கள், நாடகாசிரியர்கள், சினிமாவில் ஓரு பூதிய தோற்றத்துக்கான கனவு கண்டவர்கள் என்ற ஓரு கூட்டு எல்லோருமே ஓரு அடித்தளத்திலும் சிந்தனையிலும் ஒன்றை ஒன்று சார்ந்தவர்கள், என்ற கூட்டுணர்வும் உரையாடலும் பகிர்தலும் மூதலில் வங்காளத்திலும் பின்னர் மலையாளத்திலும் பின்னர் அதன் எளிய ஆரம்பங்களாக சனெ்னையிலும் தோன்றியது. அதன் வளெி அடையாளங்கள் தான் கோவிந்தனும் சமீ க்ஷாவும். கசடதபற வினரின் அறையில், கோவிந்தனின் ஹாரிஸ் ரோடு வீ ட்டில் இந்த மலையாள தமிழ் கலஞெர், எழுத்தாளர்களின் சகஜமான உறவாடலகை் காண் மூடிந்தது. அதன் சுவடுகளை கசடதபற, நடை, சமீ க்ஷா ஆங்கில, மலையாள இதழ்களிலும் காணலாம். அத்தோடு ஆதிமூலம், பாஸ்கரன், தக்ஷிணாமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, தாமோதரன், இன்னும் எத்தனையோ பரேின் பங்கு கொள்ளலில், காணலாம். ஆனால் இந்த பயிர் வங்க மண்ணிலும் மலையாள மண்ணிலும் சழெித்து வளர்ந்த அளவு தமிழ் மண் அதற்கு ஏற்றதாக இல்லாததால் மூளை விட்டதுமே மடிந்தும் விட்டது.

இந்த சூழல் இங்கும் இருந்தது ஓரு கூறுகிய காலத்திற்கு என்பதன் ஆவணப் பதிவு என்று காலவளெியகை் கொள்ளவணே்டும். இது போன்ற ஓரு பதிவு, ஓரு சொல்லாடல், தமிழில் வறேு இல்லை என்பதும் அதற்கு ஓரு சாட்சியம்.

□□□ □□□□□: (□□□□□□) □□□□□□□□ □□□□□: □□□□□□□□ □□□□□□□□□, **2152** □□□□□□□ □□□□□, **9-**□□□ □□□□□,□□□□□□ □□□□□ □□□□□□□, □□□□□□□**-40** □□□□□ □□ **150**

vswaminathan.venkat@gmail.com 20.6.2015